REGD. No. VL / 007 / 2009-2011 ★★★★
இன்டர்நெட் முகவரி:
http://www.dailythanthi.com

அப்பு பால் Appu Milk 500 ml Rs. 10/- 250 ml Rs. 5/-
☎ : 0416-2258559, 2254459, 3294476, 9003915187, 9003915183

- தினத்தந்தி, உள்நாட்டுச் செய்திகளை உடனுக்குடன் தருகிறது -

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

வேலூர் (14-11-2009) சனிக்கிழமை | மலர் 68 இதழ் 14 | விரோதி ஸ்ரீ ஐப்பசி மீ 28உ. ஹிஜிரி 1430 துல்கதா 26

இளைஞர் மலர் இலவச புத்தகத்து
முத்துச்சரம் 22 பக்கம் 400

STAR Star Health and A Insurance Co.Lt
கலைஞர் மருத்துவ ஆராய்ச்சி
வேலூர் கண் மற்றும் பல் மருத்
10, 19வது சாலை, பகுதி II, சத்துவாச்சாரி, வேலூர்-
கண் : 0416-2252547, 2258125, 9843272176, 93
பல் : 0416-2229172, 2255917, www.velloreeyeho



வேலூர் சி.எம்.சி மருத்துவமனையில் சர்க்கரைநோய்க்கான மருத்துவசிகிச்சை முகாம் நடந்தது. முகாமில் சர்க்கரை நோயாளிகள் எந்தவிதமாண உணவுகளை உட்கொள்ளலாம் என மருத்துவபணியாளர்கள் கண்காட்சி மூலம் விளக்கியபோது எடுத்த படம்.

# நீரிழிவு நோய் பாதிப்பை விளக்கும் கண்காட்சி

## வேலூர் சி.எம்.சி. ஆஸ்பத்திரியில் நடைபெற்றது

வேலூர், நவ.14-

நீரிழிவு நோய் பாதிப்பை விளக்கும் கண்காட்சி வேலூர் சி.எம்.சி. ஆஸ்பத்திரியில் நடந்தது.

### உலக நீரிழிவு தினம்

உலக நீரிழிவு நோய் தினத்தையொட்டி வேலூர் சி.எம்.சி. ஆஸ்பத்திரியில் விழிப்புணர்வு கண்காட்சி தொடக்க விழா நேற்றுகாலை நடந்தது. மருத்துவக்கல்லூரி சூப்பிரண்டு லயோனல் ஞானராஜ் கண்காட்சியை தொடங்கி வைத்தார். கண்காட்சியில் 15-க்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. அந்த ஒவ்வொரு அரங்கிலும் நீரிழிவு நோய் விழிப்புணர்வு பற்றிய வாசகங்களும், படங்களும் வைக்கப்பட்டிருந்தன.

### நோய்வர காரணம் என்ன?

உணவு பழக்கம், புகைபிடித்தல், குடிப்பழக்கம், அதிக உடல் எடை, உடற்பயிற்சியின்மை ஆகியவற்றின் காரணமாவும், பெற்றோர்களுக்கு நீரிழிவு நோய் இருந்தால் பிள்ளைகளுக்கு நீரிழிவு நோய் வரலாம் என்கிற வாசகங்கள் அடங்கிய அரங்கம் கண்காட்சியில் இடம்பெற்று உள்ளது.

நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் சர்க்கரையின் அளவை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ளாவிட்டால் கண், கால், சிறுநீரகம், இருதயம் போன்றவை பாதிக்கும் என்கிற விளக்கமும் கண்காட்சியில் இருந்தன.

அது போல நீரிழிவு நோய் வராமல் இருக்க என்ன செய்யவேண்டும், நோய் வந்தபிறகு எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், எந்த வகையான உணவு சாப்பிட வேண்டும், எந்த மாதிரி உணவுகளை தவிர்க்க வேண்டும் என்ற வாசகங்கள் அடங்கிய அரங்கமும் கண்காட்சியில் உள்ளன. உடற்பயிற்சி செய்யும் முறைகள் குறித்த விளக்க அரங்கமும் கண்காட்சியில் இருந்தன. கண்காட்சியை பார்க்க வந்த பொதுமக்களின் சந்தேகங்களுக்கு அரங்கில் இருந்தவர்கள் விளக்கம் அளித்தனர்.

கண்காட்சியையொட்டி இலவசமாக நீரிழிவு பரிசோதனை முகாம் நடந்தது. அந்த முகாமில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டு பரிசோதனை செய்து கொண்டனர். அதுபோல ஏற்கனவே நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களும் முகாமிற்கு வந்திருந்தனர். அவர்கள் மேற்கொள்ளவேண்டிய சிகிச்சை முறைகள் குறித்தும் ஆலோசனை வழங்கப்பட்டது.

### நடைபயணம்

அதைத்தொடர்ந்து இன்று (சனிக்கிழமை) மாலை 4 மணியளவில் நீரிழிவு விழிப்புணர்வு நடைபயணம் நடைபெறுகிறது. காட்பாடி சித்தூர் சாலையில் இருந்து புறப்படும் நடைபயணத்தை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அறிவுசெல்வம் தொடங்கிவைத்து நடந்து செல்கிறார். டான்பாஸ்கோ பள்ளி முன்பு நடைபயணம் நிறைவு பெறுகிறது. அங்கு நீரிழிவு நோய் பற்றிய விளக்க கூட்டம் நடைபெறுகிறது. கூட்டத்தில் டாக்டர்கள் மற்றும் பிரமுகர்கள் கலந்து கொண்டு பேசுகிறார்கள். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வேலூர் சி.எம்.சி. ஆஸ்பத்திரியின் நீரிழிவு சிகிச்சை பிரிவைச் சேர்ந்த டாக்டர் நிகால்தாமஸ், சேஷாத்திரி மற்றும் அலுவலர்கள் செய்து வருகிறார்கள்.